# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## பிரிவெனா சாதாரண தரப் பரீட்சை — 2023 (2024)

2024 ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள “பிரிவெனா சாதாரண தரப் பரீட்சை - 2023 (2024)” இற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பரீட்சைக்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடிவது கல்வியமைச்சில் பதிவு செய்துள்ள அடிப்படை பிரிவெனா, மகா பிரிவெனா, பௌத்த சீலமாதா கல்வி நிறுவனம் மற்றும் விசேட பிரிவெனாக்களில் மாத்திரம் ஆவதால் கல்வியமைச்சில் பதிவு செய்துள்ள மேற்படி பிரிவெனாக்களுக்கு விண்ணப்பங்கள் தற்போது தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

02. 2024 பெப்ரவரி 12ம் திகதி ஆகியும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத கல்வியமைச்சில் பதிவு செய்துள்ள அடிப்படை பிரிவெனாக்கள், மகா பிரிவெனாக்கள், பௌத்த சீலமாதா கல்வி நிறுவனம் மற்றும் விசேட பிரிவெனா ஆகியவையாகும். தமது நிறுவனத்தினால் முன்வைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒருங்கமைப்பு கிளையில் இருந்து விண்ணப்பத்தை கோரல் வேண்டும்.

03. இப் பரீட்சைக்கு தோற்றுகின்ற தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு தேவையான விண்ணப்பங்களை வார நாட்களில் அலுவலக நேரங்களில் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளைக்கு வருகைதந்து பெற்றுக் கொள்ள முடிவதுடன் தபாலில் பெற்றுக் கொள்வதற்கு தமது பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட ரூ.130.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 10X7 அளவிலான கடித உறையுடன் 2024 பெப்ரவரி 12ம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரியில் விண்ணப்பித்தல் வேண்டும். அக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “பிரிவெனா சாதாரண தரப்பரீட்சை - 2023 (2024)” என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை திணைக்கள இணைய தளத்தில் (www.doenets.lk) பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

04. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் 2024 பெப்ரவரி 20 ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அத்தினத்திற்கு முன்பு பதிவுத் தபாலில் “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ. - 1503 கொழும்பு” என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டியதுடன் விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “பிரிவெனா சாதாரண தரப்பரீட்சை - 2023 (2024)” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**5/5/4/3/2023**
**நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்த, பத்தரமுல்ல**
**2024 பெப்ரவரி 08ம் திகதி**